IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.206/2010
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 03.10 PM.

வா.சா.2 சாட்சி முத்து த.பெ.N.P.முத்து

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 27.10.2025 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. 1ம் வாதி எனக்கு என்ன உறவு என்றால் எனது மனைவியின் சித்தப்பா ஆவார். அ.வ.எண்.598/2008 வழக்கில் நான் ஒரு தரப்பினர் இல்லை என்றால் மேற்படி வழக்கின் 3ம் வாதி சீத்தாலெட்சுமி எனது மனைவி ஆவார். மேற்படி வழக்கில் எனது மனைவி சீத்தாலெட்சுமி சார்பாக சாட்சியம் அளித்தேனா என்றால் இல்லை. மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட சொத்து எனது மாமனார் மாயாண்டிசேர்வைக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைக்கபெற்ற சொத்து என்றால் சரிதான்.

2. மேற்படி வழக்கு எத்தனை செண்டிற்கு சம்பந்தப்பட்ட வழக்கு என்றால் மொத்தம் 81 செண்டு ஆகும். மேற்படி அ.வ.எண்.598/2008 வழக்கில் பிராது நகல் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கின் பிராது நகலை தாக்கல் செய்தால்தான் எனது மனைவியும் அவருடன் உடன் பிறந்தவர்களும் எத்தனை செண்டுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியும் என்றால் சரியல்ல.

3. மேற்படி வழக்கில் 6 1/2 செண்டுக்குதான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட சொத்துக்கும் 1ம் பிரதிவாதி முருகானந்தத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். மேற்படி சொத்திற்கும் முருகானந்தத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. 1ம் வாதி பழனிச்சாமி அவரும் அவருடைய வாரிசுகளும் பாகப்பிரிவினை மூலம் கிடைக்கப்பெற்ற சொத்துக்களை வீட்டு மனைகளாக பிரித்து விற்பனை செய்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

4. மேற்படி வீட்டடி மனை பிரிவுகளாக பிரிக்கப்பட்ட வரைபடத்தினை தாக்கல் செய்தால்தான் சொத்தின் வடக்கு பக்கம் பாதை உள்ளதா என்று தெரியும் என்றால் சரியல்ல. அ.வ.எண்.598/2008 வழக்கின் தீர்ப்பாணையில் கண்டுள்ள சொத்து விபரத்தில் வடபுறம் சர்வே எண்.119 மற்றும் பொதுப்பாதை என்று கண்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி பொதுப்பாதை தீர்ப்பாணையில் கண்டுள்ளதை வழக்கிற்காக இல்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. ஆணையர் அறிக்கையில் பிரதிவாதிகள் கட்டிடம் கட்டிக்கொண்டு இருப்பதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் வடபுறம் மணல் குவியல் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மணல் குவியல் உள்ள பாதையானது பொதுப்பாதை என்றால் சரியல்ல. மேற்படி அ.வ.எண்.598/2008 தீர்ப்பில் நீதிமன்ற ஆணையர் பாதையையும், வழக்கிடை சொத்தான 6 1/2 செண்டையும்

பிரித்து காண்பிக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. எனது மனைவி தாக்கல் செய்துள்ள பிராதில் 9 1/2 செண்டு இடத்தில் வடகிழக்கில் 3 செண்டு பாதைக்காக விடப்பட்டுள்ளது என்று மேற்படி வழக்கின் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 3 செண்டு பாதையும் இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள பாதையும் ஒரே நேர் பாதை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கண்டுள்ள பாதையானது வீட்டு மனையாக பிரிக்கப்பட்டபோது பொதுப்பாதையாக காண்பித்து இந்நிர் பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தர்களுக்கு 1966–1967 ல் கிரையம் 1ம் வாதியால் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

7. 1ம் வாதியால் கிரையம் கொடுக்கப்பட்ட பத்திரத்திலும், வடக்கு பக்கம் என்னால் விடப்பட்ட 20 அடி பொதுப்பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2019ம் ஆண்டு 1ம் வாதி மற்றும் வாதிகள் அனைவரும் பிரதிவாதிகளுக்கு எழுதிகொடுத்த கிரைய பத்திரங்களில் வடக்குபக்கம் பொதுப்பாதை என்று குறிப்பிட்டு எழுதிகொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் சொத்துக்கு வடக்கு பக்கம் பொதுப்பாதை உள்ளதை மறைத்து வாதி எனது உறவினர் என்பதால் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. பிரதிவாதி சொத்தை நான் அளந்து பார்த்தேனா என்றால் சர்வேயர் மூலம் அளந்து பார்த்தேன். எதன் அடிப்படையில் அளந்து பார்த்தேன் என்றால் எனக்கும் பிரதிவாதிக்கும் இடம் சம்பந்தமாக பிரச்சனை இருந்ததால் அளந்து பார்த்தோம். பிரதிவாதிக்கு கிரைய பத்திரம் மூலம்

பாத்தியப்பட்ட சொத்தானது எனது மாமனாருக்கோ, மனைவிக்கோ பாகபிரிவினை மூலம் பாத்தியப்பட்ட சொத்து அல்ல என்றால் சரியல்ல.

9. மேற்படி சொத்து எனது மனைவிக்கோ, மாமனாருக்கோ பாத்தியப்பட்டது என்பதை காட்டக்கூடிய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சேகர் மாயாண்டி தாமஸ் உரக்கர் என்பவருக்கு கிரையம் கொடுத்த கிரைய பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பத்திரத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யாமல் தாக்கல் செய்ததாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10. மேற்படி கிரைய பத்திரத்தை தாக்கல் செய்தால்தான் வழக்கு பொதுப்பாதை என்பதை தீர்மானிக்க முடியும் என்றால் சரியல்ல. வழக்கிடை சொத்து பொதுப்பாதைதான் வாதிக்கு ஆதரவாக வழக்கு சொத்தை அபகரிக்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 03.40 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.10.27 10:12:54 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.